**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 48/2020

Deposition of witness for Prosecution : Pw5

Defence :

Name : Kalyankumar
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 02.11.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் எழில் நகர் பேகுபள்ளியில் குடியிருக்கிறேன். நான் என் அண்ணண் சண்முகம் கம்பெனியில் சூப்பரைசராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும்.அவர் அ.சா.1வீட்டிற்கு அருகே குடியிருக்கிறார். 05.10.2019 அன்று காலை 8.30 மணிக்கு எங்கள் கம்பெனி சந்தியா இஞ்சினியரிங் ஒர்க்ஸ்க்கு முன்பு நான், என் அண்ணண் சண்முகம்.அண்ணி மகாலட்சுமி,அண்ணண் மகன் மெய்யப்பன்.கம்பெனியில் வேலைசெய்யும் நாகா என்ற சவுத்ரி, ஸ்ரீதர் ஆகியோர் சென்றோம். பூஜைக்காக வாழைக்கண்றை அறுத்தோம். அறுத்து வைத்துக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி வாழைக்கண் மீது துப்பினார். அது பற்றி எனது அண்ணி மகாலட்சுமி எதிரியை கேட்டார். அதற்கு எதிரி எனது அண்ணியை பார்த்து தேவடியா, கண்டாரஓளிஅப்படி தான் துப்புவேன் உன்னால் என்ன செய்ய முடியும் என்று சொன்னார். அது பற்றி என் அண்ணண் கேட்டார். உன்னை விட்டு வைத்தது தவறு என்று சொல்லிவிட்டு எதிரி சென்றுவிட்டார். எனது அண்ணனும் அண்ணியும் எச்சில் துப்பிய வாழைக்கன்று பூஜைக்கு உதவாது என்று கிளம்பினார்.அப்பொழுது கொடுவாளை எடுத்து வந்து இதோட செத்தத்தொலை என்று எதிரி வெட்டினார்.அதை எனது அண்ணண் மகன் மெய்யப்பன் தடுத்தார்.அப்போது அவரது இடது கை பெருவிரல் துண்டாகி விட்டது. எனது அண்ணனுக்கு தலையின் பின்புறம் காயம்

ஏற்பட்டு ரத்தம் வந்தது. நான் சத்தமபோட்டு கொண்டுபோனேன்.அப்போது உன்னையும் வெட்டி கொலைசெய்யாமல் விடமாட்டேன் என்று சொன்னார். எதிரியின்நோக்கமே எனது அண்ணனை கொலைசெய்வது தான்.எப்பொழுதும் அதை சொல்லிக்கொண்டிருப்பார். எனது அண்ணனையும் அவரது மகனையும் ஓசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்ச்சக்கு அழைத்துச் சென்றேன். மேல் சிகிச்சைக்காக அவர்களை குணம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது அண்ணனுக்கும் அவரது மகனுக்கும் குணம் மருத்துவமயில்சிகிச்சை அளித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நாங்கள் எங்கள் வீட்டை விரிவுப்படுத்தி கட்டியபோது எங்களுக்கும் எதிரிக்கும் பிரச்சனை வந்தது. அதிலிருந்து எனதுஅண்ணண் மீது எதிரிக்கு பகை. கம்பெனி மீது சென்னையில் எதிரி புகார் கொடுத்தார். எனதுஅண்ணனுக்கு ஆதரவாக தீர்ப்பானது. அதிலிருந்து எங்களுக்குள் பிரச்சனை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

05.10.2019 அன்று குணம் மருத்துவமனயில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்பொழுது மணி 11.30 இருக்கும். நான் சொல்ல சொல்ல போலிஸ் எழுதினார். அவர் எந்த பேனாவில் எழுதினார் என்று எனக்குத் தெரியாது.ஆனால்பேனாவில் எழுதினார். 10 நாள் கழித்து மீண்டும் போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு வர வைத்து விசாரித்தார்கள். எதிரி பார்த்த போதெல்லாம் எனதுஅண்ணணிடம் பிரச்சனை செய்யும் விவரத்தை நான் போலிஸ் விசாரயைில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பதட்டத்தில் சொல்லவில்லை. 4 வாழை கன்றுகள் வெட்டப்பட்டது. சமையலறையில் பயன்படுத்தும்கத்தியை வைத்து தான் வாழைக்கன்றுகளை அறுத்தோம். வாழைமரம் அறுத்த இடம் எங்களுக்கு சொந்தம். எதிரி நின்றிருந்தஇடம் அவரது வீடு. இத்தோடு ஒழிந்துபோ என்று எதிரி வெட்டியதாக போலிசாரிடம் நான் சொல்லியுள்ளேன். வாழைமரம் வெட்டிய போது எதிரி அவரது வீட்டிற்குள் சென்றார்.உடனே வந்து விட்டார். வாழைமரம் வெட்டிய இடத்தில் இருந்து 4 அடி தூரத்தில் எதிரிவந்துவெட்டினார். அ.சா.2ன் விரல்துண்டாகியிருந்தது.சிறிதளவு ஒட்டிக்கொண்டிருந்தது. சம்பவத்தின் போது என் அண்ணண் சிவப்பு கலர்சட்டையும்,பிரவுன் கலர்பேண்ட்ம் அணிந்திருந்தார். மேற்படி ரத்தக்கறை படிந்த துணிகளை போலிசார்கைப்பற்றினார்களா என்று எனக்குத் தெரியாது.எங்கள் கம்பெனிக்கு தெற்குபுறம் வாழைமரம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த வாழைமரம்அருகில் தான்எதிரிசொத்து உள்ளது. கம்பெனி கட்டப்படும் காலங்களில் முன்பிருந்தே எதிரி பிரச்சனை செய்து வருகிறார். அ.சா1எனதுஅண்ணண்.அ.சா.2 எனது அண்ணண் மகன். நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும்,சம்பவத்த்தை பார்த்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.